செ.வெ.எண்:33/2018 நாள்:20.02.2018

# பத்திரிக்கை செய்தி




சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் (19.02.2018) அன்று பள்ளிக் கல்வித்துறையின் மூலம் நடைபெறவுள்ள 12ஆம் வகுப்பு மற்றும் 11ஆம் வகுப்பு, 10ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வின் போது மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ,ப.,அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தது,

தமிழக அரசின் உத்தரவுப்படி, பள்ளிக் கல்வித்துறையின் மூலம் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வு 01.03.2018 அன்று துவங்கவுள்ளன. இதேபோல் 11ஆம் அரசு பொதுத் தேர்வு 07.03.2018 அன்று துவங்கவுள்ளன. 10 ஆம் அரசு பொதுத் தேர்வு 16.03.2018 அன்று துவங்கவுள்ளன. இத்தேர்வுகள் நடைபெறுவதையொட்டி தேவையான வினாத்தாள்கள் பெறப்பட்டு, பாதுகாப்புடன் கண்காணிக்கப்படுவதுடன் பள்ளிக் கல்விதுறையின் மூலம் அவ்வப்போது ஆய்வு மேற்கொண்டு வரவேண்டும். அதேபோல் தேர்விற்கான மையங்களை பார்வையிட்டு அனைத்து வகையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கழிப்பிடக் கட்டடங்கள் சரியாக உள்ளதா என உறுதி செய்து கொள்ள வேண்டும். மேலும், தேர்வுக் காலங்களில் தடையின்றி மின்சாரம் வழங்க உரிய பணிகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோல் மாணவ, மாணவியர்களுக்கு தேவையான பேருந்து வசதிகளையும் ஏற்படுத்திட வேண்டும் மற்றும் காவல் துறையின் மூலம் உரிய பாதுகாப்புப் பணிகள் மேற்கொண்டு நடைபெறவுள்ள அரசுப் பொதுத் தேர்வுகளை சிறப்புடன் நடத்திட வேண்டுமென அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ,ப.,அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.ஆஞ்சிலோ இருதயசாமி, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.சுந்தரமூர்த்தி மற்றும் அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

::வெளியீடு:: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,சிவகங்கை.